[6th March 1961

(*c*) The entire quota allotted up to October 1960, except for a small quantity relating to October, 1960 has been received. The balance due for October is in transit.

(*d*) The balance is in transit and is likely to be received shortly.

*611 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to decontrol the price, allotment and distribution of sugar; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal at present to decontrol the price, allotment and distribution of sugar, so far as information is available with the Government.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM: இந்த மாநிலத்தின் சர்க்கரை தேவை ஆண்டுக்கு எவ்வளவு? இப்போது உற்பத்தியாவது எவ்வளவு? பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் நிதி அமைச்சருடைய பட்ஜெட் உரையில் அவை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது 11 ஆயிரம் டன் மாதா மாதம் வாங்குகிறோம் என்றால் அதுதான் நம் ராஜ்யத்தின் தேவை என்று எடுத்துக்கொள்ளலாம். எவ்வளவு உற்பத்தியாகிறது என்ற புள்ளிவிவரம் இல்லை. அகில இந்தியாவையும் சேர்த்துப் பார்க்கிறபோது உற்பத்தி பெருகியிருக்கிறது. அதனால் அந்நிய நாட்டுக்குக்கூட ஏற்றுமதி செய்யலாம் என்று மத்திய அரசாங்கம் யோசித்து வருகிறது.

SRI A. A. RASHEED : If there is more stock of sugar available, what is the reason for not decontrolling the price of sugar?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Before taking steps to decontrol the price of sugar, all other aspects of the matter have to be looked into. Just now if there is sugar available in plenty everywhere, we should not take any hasty decision about decontrolling sugar. Sometimes the position fluctuates.

SRI S. NAGARAJA MONIGAR : சிலசமயம் சர்க்கரை பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் ரெயில்வே போக்குவரத்து சாதனங்களினால் ஏற்படும் கஷ்டமா? அல்லது சப்ளை செய்ய வேண்டிய இடங்களில் இருக்கும் கஷ்டமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல சில சமயங்களில் ரயில்லே போக்குவரத்தினால் ஏற்படுகின்ற இடைஞ்சல் தற்காலிக பற்றாக்குறையை அங்கங்கே ஏற்படுத்துகிறது.

6th March 1961]

SRI S. M. ANNAMALAI: அமைச்சர் அவர்கள் சொல்லும் போது இதர மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரை இங்கு தருவிக்கப்படுவதாகச் சொன்னார். நம் மாநில உற்பத்தி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா? அப்படி அனுப்பப் படுமானால் அதை இங்கேயே விநியோகம் செய்து வெளி மாநிலத்தில் இருந்து வருவதை குறைத்துக்கொண்டால் இங்கே விலை குறையாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த மாநிலச் சர்க்கரையைச் சாப்பிடுவதோடு, வெளி மாநிலச் சர்க்கரையையும் சாப்பிட்டால்தான் ருசி பார்த்து நன்றாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ளலாம்.

SRI T. K. SUBBIAH மத்திய அரசாங்கம் வெளி தேசங்களுக்கு வெல்லத்தை ஏற்றுமதி செய்ய நமது சர்க்கார் யோசனை கூறுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வடநாட்டிலேயே வெல்லத்தைச் சிந்துவார் இல்லை என்றால் வெளி நாட்டிற்கு இதை அனுப்புவது சாத்தியம் என்று தோன்றவில்லை. முன் இருந்த ஏற்றுமதிகூட குறைந்துவருகிறது. தற்போது வெல்லம் விலை குறைந்தும் இருக்கிறது.

Health Centre (Kandamanaickanur)

* 612 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா, ஆண்டிப்பட்டி பிர்க்கா ப்ளாக் டெவலப்மெண்ட் பகுதியில், கண்டமநாயக்கனூரில் ஹெல்த் சென்டர் திறக்க ப்ளாக் அட்வைஸரி கமிட்டியில் நிறைவேறிய தீர்மானம் சென்ற இரண்டு ஆண்டு காலமாக நிறைவேறாத காரணம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: The Primary Health Centres are opened according to a phased programme and the question of opening a centre in the Andipatti block during the current year is under consideration.

Motor car headlights

* 613 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Electricity be pleased to state the reason for prohibiting the use of motor car headlights in the City?

THE HON. SRI V. RAMAIAH: Headlights which dazzle the drivers of other vehicles are an obvious source of inconvenience and danger which may lead to accidents. Therefore, under existing provisions of the Madras Motor Vehicles Rules, the high beam of the headlights should not be used and the beam should be kept deflected downwards by means of the dipping device that is fitted on all motor vehicles. It is only the high beam of the headlights and not the dipped beam that is prohibited under the rules. Action is being taken to enforce this provision in the interests of safer traffic within the limits of the City.